சுற்றறிக்கை 04/2019

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
வடக்கு மாகாண சபை.
2019.09.19.

சகல பலநோக்குகூட்டுறவு சங்கங்களினதும்,
சகல பனதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும்,
சகல இரண்டாம் படி கூட்டுறவுசங்கங்களினதும்
தலைவர்கட்கு,

**சகல பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள், சகல பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்கள், சகல இரண்டாம்படி படி கூட்டுறவு சங்கங்களின் இயக்குனர்சபை உறுப்பினர்களுக்கும் பொதுச்சபை உறுப்பினர்களுக்குமான படிகளும் மற்றும் பிரயாணச் செலவுகளும்.**

மேற்படி வடமாகாணத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள், பனைதென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டாம் படி கூட்டுறவுச்சங்கங்கள் என்பனவற்றின் இயக்குனர்சபை கூட்டங்களுக்கு கலந்துகொள்ளும் இயக்குனர் சபை உறுப்பினர்களின் படிகளும், பொதுச்சபை கூட்டங்களுக்கு கலந்துகொள்ளும் பொதுச்சபை உறுப்பினர்களுக்கான(பேராளர்கள்) படிகளும், பிரயாணச் செலவுகளும் பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றன.

1. இயக்குனர்படி :

1.1. இயக்குனர் சபை கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக தலைவர் உள்ளிட்ட இயக்குனர் சபை உறுப்பினர்கட்கு உணவுப்படிகள் உட்பட மாதமொன்றுக்கு உச்ச எல்லை ரூபா 1200/= ற்கு மேற்படாதவாறு, கூட்டமொன்றிற்கு ரூபா 400/= ற்கு மேற்படாத வீதத்திற்கிணங்க, ஆகக்கூடியது 3 கூட்டங்களுக்குரிய படியினைப் பெற்றுக்கௌள்ளமுடியும்.

1.2. இலாபத்திலியங்கும் மேற்குறிப்பிட்ட கூட்டுறவு சங்கங்களின் இயக்குனர் சபை கூட்டங்களுக்கு ரூபா 100/= வீதமான படியொன்றினை மாதமொன்றுக்கு உச்ச எல்லை ரூபா 300/= ற்கு மேற்படாதவாறு 3 கூட்டங்களுக்குரிய படியினை மேலதிக இயக்குனர்படியாக பெற்றுக் கொள்ளமுடியும். அந்தந்த மாத இலாபம் கணிக்கும் போது கிராமிய வங்கிப் பகுதிலாபத்தினை கணக்கில் எடுக்காமலும், மொத்த மேலதிகத்திலிருந்து மொத்த குறைவுகளை கழித்தும்,(சகல செலவுகளும்,அட்டுறு செலவுகளும்) கணக்கில் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும். கணக்காளரால் கணக்குகள் உறுதிப்படுத்தப்பட்டு சங்கம் மீதிலாபத்தில் இயங்குவதை இயக்குனர்சபை ஏற்றுக்கொண்ட பின்னரே இப்படியை வழங்க முடியும்.

1.3. இப்படியினைப் பெற்றுக்கொள்வதற்கு தலைவர் உள்ளிட்ட இயக்குனர்கள் 2 மணித்தியாலங்களுக்குக் குறையாமல் இயக்குனர் சபை கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும்.

1.4. இயக்குனர் சபைக் கூட்டங்களுக்கு கலந்துகொள்வதற்காக அவரால் பொதுவாகனங்களில் பிரயாணம் செய்வதற்கு நேர்ந்த தொகையை பிரயாண செலவாக இயக்குனர் பெற்றுக் கொள்ளமுடியும். சொந்தவாகனம் வைத்திருக்கும் இயக்குனர் ஒருவருக்கு மோட்டார் சைக்கிளுக்கு 1கி.மீ.க்கு /ஒருவழிக்கு ரூபா 10.00 ரூபா வீதமும் அல்லது கார் மற்றும் ஏனைய 4 சில்லு வாகனங்களுக்கு 1கி.மீ.க்கு/ஒருவழிக்கு ரூபா 20 வீதமும் பெற்றுக்கொள்ள முடியும். சொந்த வாகனம் வைத்திருக்கும் இயக்குனர் அவ்வாகனம் அவரது பெயரிலேயே பதிவையும், அனுமதிப்பத்திரத்தையும் கொண்டு இருப்பதை இயக்குனர்சபையால் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. பொதுச்சபை உறுப்பினர்கள்(பேராளர்கள்) படி :

2.1. மேற்குறித்த வகை கூட்டுறவு சங்கங்களின் பொதுச்சபை கூட்டங்களில் பங்குபற்றும் பேராளர்களுக்கு ரூபா 350/= படியொன்றினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேற்படி திருத்தப்பட்ட படிகளின் ஏற்பாடுகளை உள்ளடக்கிய நடைமுறை விதிகள் பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே கொடுப்பனவுகள் செல்லுபடியாகும். இக் கொடுப்பனவு 01.10.2019 ஆம் தேதியில் இருந்து நடைமுறைக்கு வருவதுடன், இத்திகதிக்கு முன்னர் வெளியிடப்பட்ட 01/2013, 01/2015 சுற்றுநிருபங்கள் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

3. இயக்குனர்கள் சங்கம் தொடர்பான விடயங்களில் கலந்து கொள்வதற்கான இணைந்த படிகளும், பிரயாண படிகளும்.

3.1. சங்கம் தொடர்பான விடயங்களுக்காக சங்கத்தொழிற்பரப்புக்கு வெளியே போக வர 12 கி.மீ அப்பால் 6 மணித்தியாலத்திற்கு மேல் 12 மணித்தியாலத்துள் செலவழிக்க நேரிடின் இணைந்தபடி ரூபா 800/= இன் அரைப்பங்கினையும் 12 மணித்தியாலங்களுக்கு மேல் முழு இணைந்தபடி ரூபா 800/= இனையும் 24 மணித்தியாலத்துக்கு மேற்படின் இணைந்தபடியின் தொகைக்கு மேலதிகமாக 25% விசேடபடியினையும் வழங்க முடியும். அத்துடன் பொதுபோக்குவரத்துக்கான பிரயாணப் படியினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

பொ.வாகீசன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாண சபை.

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வட மாகாணம்

பிரதி : 1. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் - கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் யாழ்ப்பாணம்.
2. பணிப்பாளர், மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம், வவுனியா.